11.05.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கிடப்பில் வாழைத்தார்கள் பதப்படுத்தும் திட்டம்

தேனி :தேனி மாவட்டத்தில் தி.மு.க., அரசு கொண்டு வந்த வாழைத்தார் பதப்படுத்தும் ரூ.10 கோடி மதிப்பிலான திட்டத்தை கை விட்டதே, தற்போதைய நெருக்கடிக்கும், விவசாயிகளின் தற்கொலைகளுக்கும் காரணமாக அமைந்து விட்டது.தேனி மாவட்டத்தில் கம்பம், கூடலூர், சின்னமனூர் பகுதிகளில் ஜூன் முதல் டிசம்பர் வரையிலும், ஜனவரி முதல் மார்ச் வரை குச்சனூர், பாலார்பட்டி, உப்புக்கோட்டை, உப்பார்பட்டி போன்ற பகுதிகளில் வாழை மகசூல் வரும். இம் மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் வாழை சாகுபடி நடந்து வருகிறது. வாழை மற்றும் அழுகும் பொருட்களை பாதுகாக்க 2008ம் ஆண்டில் தி.மு.க., அரசு ரூ.10 கோடி செலவில் நவீன குளிர்சாதன கிடங்கு அமைக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு 74 சதவீத நிதியை அரசும், 26 சதவீத நிதி விவசாயிகள் பங்கு தொகை என நிர்ணயிக்கப்பட்டது. வாழை விவசாயிகளுக்கு யூனியன் வங்கி தனிநபர் கடனாக தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் ரூ.2.50 கோடி செலுத்த தயாரானது.இதற்காக 5 ஏக்கரில் சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. இங்கு 100 டன் வாழை தார்களை பழுக்கவும், 100 டன் சிப்பம் கட்டவும், 100 டன் குளிர்பதனம் செய்யும் வகையில் கிடங்கு கட்ட ஏற்பாடுகள் நடந்தன. இத்திட்டத்திற்கான அரசாணை வெளியாகி தனி அலுவலர் நியமிக்கப்பட்ட நிலையில் ஆட்சி மாறி அ.தி.மு.க. அரசு அமைந்தது.

தி.மு.க., அரசு கொண்டு வந்த பல திட்டங்களை அ.தி.மு.க., அரசு கிடப்பில் போட்டது. வாழைத்தார் பதப்படுத்தும் திட்டமும் இந்த பட்டியலில் சேர்ந்தது.

இத் திட்டத்தை நிறைவேற்றி இருந்தால் தேனியில் இருந்து நாள்தோறும் வெளிநாடுகளுக்கு வாழையை அதிகளவில் நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்திருக்க முடியும். விளை பொருளுக்கு விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் தற்கொலை செய்யும் முடிவுக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள்.

மாவட்ட வாழை விவசாயிகள் சங்க தலைவர் நாராயணசாமி கூறியதாவது வாழை விவசாயிகளை பாதுகாக்க வேண்டுமானால் கைவிடப்பட்ட குளிர்பதன கிடங்கு அமைக்கும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். இதில் வாழை மட்டும் இன்றி அழுகும் வேளாண் பொருட்களை பாதுகாத்து, நல்ல விலை வரும் போது விற்பனை செய்யலாம். விவசாயம் மேம்படும் என்றார்.

**வத்தல் விலை வீழ்ச்சி**

ஆர்.எஸ்.மங்கலம் :ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலத்தில் நடந்த மிளகாய் சந்தைக்கு சுமார் 140 குவிண்டால் (குவிண்டால்- 100 கிலோ) குண்டு மிளகாய் வத்தல் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரம் குவிண்டால் 7ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்ற முதல் தர பெரிய குண்டு வத்தல், குவிண்டாலுக்கு ரூ. 200 விலை உயர்ந்து குவிண்டால் 7 ஆயிரத்து 500க்கு விற்றது. அதேநேரத்தில் குவிண்டால் 5 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்ற 2ம் தர சிறிய குண்டு வத்தல், குவிண்டாலுக்கு ரூ. 400 விலை குறைந்து 5 ஆயிரத்து 100 ரூபாய்க்கு விற்றது. சிறிய குண்டு மிளகாய் வத்தல்கள் தரமின்றி காணப்பட்டதால் விலை வீழ்சியடைந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## திருக்கோவிலூரில் நுங்கு விற்பனை ஜோர்

திருக்கோவிலூர்: கோடை வெப்பத்தை சமாளிக்க இயற்கை தந்த கொடை "நுங்கு'. குளிர்ச்சியும், சுவையும் மிக்க பொருளான இது கடுமையான வறட்சியை தாங்கி, நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கும் பனைமரத்தில் இருந்து கிடைக்கிறது.

பனை மரத்தில் கிடைக் கும் பதனீர் உடல் சூட்டை போக்குவதுடன், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது என்கின்றனர் சித்த மருத்துவர்கள். பனைமரத்தின் வேர், மழை நீரை பல மீட்டர் ஆழத்திற்கு, பூமிக்குள் கொண்டு சேர்க்கிறது. வெயில் காலங்களில் அதனை உறிஞ்சி மனிதனுக்கு நுங்காகவும், பதநீராகவும் தருகிறது. சுற்று சூழலுக்கும், மனித குலத்திற்கும் பயனளிக்கும் பனைமரம், தற்போது வெட்டப்பட்டு செங்கல் சூளைகளில் விறகாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் பனைமரத்தினை காண்பதே அரிதாகி வருகிறது.

இந்நிலையில் திருக்கோவிலூர் அடுத்த தகடி, முடியனூர் உள்ளிட்ட கிராமங்களில் பனைமரம் வளர்க்கப்படுகிறது. ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே பலன் அளிக்கக்கூடிய இந்த மரங்களில் இருந்து நுங்கு வெட்டுவதற்கென்றே ஒரு சில குடும்பங்கள் உள்ளன. இவர்கள் பனை மரங்களை குத்தகை எடுத்து, நுங்கு விற்பனையை செய்கின்றனர். இப்பகுதியில் இருந்து வெட்டப்படும் நுங்கு, மோட்டார் சைக்கிள் மூலம் கொண்டு வந்து திருக்கோவிலூரில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு நுங்கு விளைச்சல் அபரிமிதமாக இருப்பதால், பத்து ரூபாய்க்கு 3 நுங்கு என விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது 5 நுங்கு என விற்கப்படுகிறது. காலை 10:00 மணி முதல் மதியம் 2:00 மணிக்குள்ளாக 50க்கும் மேற்பட்ட நுங்கு வியாபாரிகள் இதில் ஈடுபடுகின்றனர். இதனை நகர மக்கள் மட்டுமின்றி கிராமப்புறத்தினரும் வாங்கிச் செல்கின்றனர்.

ருசி மிகுந்த தகடி நுங்கு, மக்கள் மனதில் இடம் பிடித்து விட்டதுதான் அப்பகுதியில் பனைமரம் உயிர்ப்புடன் இருக்க காரணமாகவும் இருக்கிறது.

## ரூ. 1.17 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 2,600 மூட்டை மஞ்சள், 1.17 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், கடலூர் ஆகிய வெளிமாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராமப் பகுதியைச் சேர்ந்த, 400 விவசாயிகள் விளைவித்த, 2,600 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,899 முதல் 9, 369 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் குவிண்டால், 6, 389 முதல் 8,469 ரூபாய் வரை, பனங்காலி மஞ்சள் குவிண்டால், 17 ஆயிரத்து, 199 ரூபாய் முதல், 20 ஆயிரத்து, 300 ரூபாய் வரை விற்பனையானது.ஏலத்தில், பத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு, 2,600 மூட்டை மஞ்சளை, 1.17 கோடி ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## ரூ.6.50 லட்சம் மதிப்பில் வேளாண் பொருள் ஏலம்

கோபி : கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 6.50 லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார்கள் மற்றும் தேங்காய், ஏலம் மூலம் நேற்று விற்பனையானது.கோபி மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்த வாழை தார்களை, கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதற்காக வாரத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில், இங்கு ஏலம்

நடக்கும். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், கதளி ஒரு கிலோ, 14 ரூபாய், நேந்திரம், 16 ரூபாய்க்கும் விலை போனது.செவ்வாழை தார்,450 ரூபாய்க்கும், தேன்வாழை,450, ரஸ்தாளி,300 ரூபாய், பூவன்,300 ரூபாய், பச்சைநாடான்,250 ரூபாய், மொந்தன்,200 ரூபாய்க்கும் விலை போனது. விற்பனைக்கு வந்த, 6,000 தார்களும், மொத்தம், 5.50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இதேபோல், தேங்காய் ஏலத்தில், 10,000 தேங்காய் வரத்தானது. ஒரு தேங்காய், 7 முதல், 13.50 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காயும், ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## உலக புகழ் பெற்றது ஊட்டி ரோஜா பூங்கா; பரிசளிப்பு விழாவில் பெருமிதம்

ஊட்டி : 'ஊட்டி ரோஜா பூங்கா, உலகளவில் புகழ் பெற்றுள்ளது' என, பெருமிதம் தெரிவிக்கப்பட்டது.

ஊட்டியில் நடந்த வரும் கோடை விழாவின் தொடர்ச்சியாக, ஊட்டி அரசு ரோஜா பூங்காவில், நேற்று முன்தினம், 14வது ரோஜா கண்காட்சி துவங்கியது. 4,000 வகையைச் சேர்ந்த, 27 ஆயிரம் ரோஜா செடிகள் மற்றும் பல்வேறு அலங்காரங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்டனர். நேற்று மாலை, நிறைவு விழா நடந்தது. தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி வரவேற்றார்.

மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில்,“பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே, சீன காடுகளில் இருந்து ஒரு மருந்து பொருளாக கண்டெடுக்கப்பட்டது தான், ரோஜா. ரோஜா மலர்களின் இதழ் கள், ஆயுர்வேத மருத்துவத்தின் சிறந்த மூலப்பொருளாக பயன்படுத்தப்பட்டு வந்தது. உலகில் உள்ள மிகச் சிறந்த ரோஜா பூங்காக்களில் ஒன்றாக, ஊட்டி அரசு ரோஜா பூங்கா திகழ்கிறது,” என்றார்.

நீலகிரி ரோஜா சங்க அமைப்பாளர் கிருஷ்ணகுமார் பேசுகையில்,"ரோஜா பூங்காவுக்கு வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பார்வையாளர்களின் வசதிக்கேற்ப வாகன பார்க்கிங், கழிப்பறை வசதி செய்து கொடுக்க வேண்டும்," என்றார். பின், சிறந்த ரோஜா தோட்டங்கள் மற்றும் காட்சி அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.கப்பத்தொரையை சேர்ந்த எல்சமா தாமஸ், கோழிப்பண்ணை ஹியுமன் பயோலஜிக்கல் நிறுவனம், ஸ்டெர்லிங் பயோடெக் உட்பட நிறுவனங்களுக்கு சுழற் கோப்பை வழங்கப்பட்டது. ஊட்டி குட்ஷெப்பர்டு சர்வதேச பள்ளி, குன்னூர் புனித ஜோசப் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வெலிங்டன் கன்டோன்மென்ட் உட்பட நிறுவனம் மற்றும் தனி நபர்கள் என, 45 பரிசுகள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஊராட்சி தலைவி மேனகா பேசினார். குன்னூர் ஆர்.டி.ஓ., பழனிக்குமார், தோட்டக்கலை துணை இயக்குனர் சாம்ராஜ் உட்பட பலர் பங்கேற்றனர். தோட்டக்கலை உதவி இயக்குனர் மீரா குமாரி நன்றி கூறினார்.

## தாவரவியல் பூங்காவில் 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் அலங்காரம்

ஊட்டி : ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வரும், 15ம் தேதி மலர் கண்காட்சி துவங்க உள்ளதையடுத்து, 15 ஆயிரம் மலர் தொட்டிகளை பார்வைக்கு அடுக்கி வைக்கும் பணி துவங்கியுள்ளது.நீலகிரி மாவட்டத்தில், கோடை விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வரும், 15,16,17 ஆகிய தேதிகளில், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், 119வது மலர் கண்காட்சி துவங்க உள்ளது. இதற்காக, பூங்காவில், ஆங்காங்கே மலர் படுகைகளில் நடவு செய்யப்பட்டுள்ள, 3.50 லட்சம் வண்ண மலர்கள், பார்வைக்கு விருந்தாக அமைந்துள்ளன.பூங்காவின் முகப்பில், 15 ஆயிரம் மலர் தொட்டிகளை அடுக்கி வைக்கும் பணி நேற்று

துவங்கியது; மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்தார். தோட்டக்கலை இணை இயக்குனர் மணி முன்னிலை வகித்தார்.

இதில் பெங்களூருவில் இருந்து தருவிக்கப்பட்ட மலர் செடிகள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, பல வண்ண சாமந்தி உட்பட, 185 ரக மலர் செடிகளில், மலர்கள் பூத்து குலுங்குகின்றன. இந்தாண்டு கூடுதலாக, 6,000 பல வண்ண மலர் தொட்டிகள், சுற்றுலா பயணிகளுக்காக தயாராக உள்ளன.புது டிக்கெட் அறிமுகம் : மலர் கண்காட்சிக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு, முதன் முறையாக 'கியூ.ஆர்.ரீடர்' எனப்படும் டிக்கெட் வழங்க, தோட்டக்கலை துறை திட்டமிட்டுள்ளது. இந்த டிக்கெட்டில், விழா நடக்கும் இடம், கட்டணம் உட்பட அனைத்து விபரங்களும் இடம் பெற்றுள்ளன. டிக்கெட் விற்பனையில் முறைகேடு நடப்பதை தவிர்க்கவும், போலி டிக்கெட் விற்பனையை தடுக்கவும், இப்புதிய டிக்கெட் அச்சடிக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரிய உம்பளாச்சேரி கால்நடை கண்காட்சி

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி யூனியன் கொருக்கை கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், பாரம்பரிய உம்பளாச்சேரி இன கால்நடை கண்காட்சியை, மாவட்ட கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகன்ராஜ், கால்நடை பராமரிப்பு துறை கூடுதல் இயக்குநர் கமலநாதன், மண்டல இணை இயக்குநர் டேவிட், ஆர்.டி.ஓ., (மன்னார்குடி) செல்வசுரபி, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலெட்சுமி, யூனியன் தலைவர் வேதநாயகி, முத்துப்பேட்டை யூனியன் தலைவர் நடராஜன், திருத்துறைப்பூண்டி நகராட்சித் தலைவர் உமாமகேஸ்வரி, திருவாரூர் மாவட்டம் உம்பளாச்சேரி பாரம்பரிய கால்நடை வளர்போர் சங்கம் ஜானகிராமன்,

கொருக்கை ஊராட்சித் தலைவர் பூபதிகுப்புசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில், 221 கால்நடை வளர்ப்போர்களும் 375 கால்நடைகளும் இடம் பெற்றனர். முதல் பரிசாக, 20 ஆயிரம், இரண்டாம் பரிசாக, இருவருக்கு தலா, 10 ஆயிரம், , மூன்றாம் பரிசாக, நான்கு பேருக்கு தலா, 5,000 ஆயிரம் ரூபாயும், ஆறுதல் பரிசாக, ஆறு பேருக்கு தலா, 2,500 வீதம் காசோலையை மாவட்ட கலெக்டர் மதிவாணன் வழங்கினார்.

### சூரிய மிளகாய் உலர் கூடம் திறப்பு

பரமக்குடி: பரமக்குடி அருகே நென்மேனி கிராமத்தில் முதன் முறையாக சூரியசக்தி மிளகாய் உலர் கூடத்தை நேற்று கலெக்டர் நந்தகுமார் திறந்து வைத்தார்.

இது ரூ. 4 லட்சம் மதிப்பீட்டில், 50 சதவீதம் மானிய விலையில் தனியாருக்கு சொந்தமான இடத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மிளகாய்களை நன்கு உலர்த்துவதால், ஈரப்பதம், பூஞ்சை காளான்கள் இன்றி, விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 5 குவின்டால் வீதம் மிளகாய்களை உலர்த்த முடியும். நிகழ்ச்சியில் வேளாண் அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தென்மேற்குப் பருவமழை ஜூன் 1-இல் தொடங்கும்

நிகழாண்டில் தென்மேற்குப் பருவமழை வரும் ஜூன் 1-ஆம் தேதி தொடங்க வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாட்டின் பெரும்பாலான பகுதிகள் தென்மேற்குப் பருவ காலத்தில் தான் அதிக மழை பெறுகின்றன. நாட்டின் வேளாண் உற்பத்தி தென்மேற்குப் பருவமழையை நம்பியே உள்ளது. கடந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை 12 சதவீதம் குறைவாக இருந்தது. இதனால், வேளாண் விளைச்சல் பாதிக்கப்பட்டது.நிகழாண்டு பருவமழை ஜூன் 1-ஆம் தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் கணித்துள்ளது. மேலும், வழக்கத்தைவிட மழையளவு குறைவாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த வனத்துறை முடிவு

தேனி மாவட்டத்தில் வனத்துறை சார்பில் ஒவ்வொரு மாதமும் 2-ஆவது வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.தேனி ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாவட்ட வன அலுவலர் மாரிமுத்து தலைமையில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேகமலை வன உயிரின காப்பாளர் சொர்ணப்பன் முன்னிலை வகித்தார். இதில், வனப் பகுதியில் மலை மாடுகளை மேய்ச்சலுக்கு அனுமதித்தல், வன விலங்குகளிடமிருந்து விவசாயப் பயிர்களை பாதுகாக்க அகழி, சூரிய சக்தி மின் வேலி அமைத்தல், காட்டுப் பன்றிகளால் பயிர் சேதம் ஏற்படுவதை தடுத்தல் ஆகியவை குறித்து ஆலோசனை நடைபெற்றது.

வனத்துறை தொடர்பான விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படுத்தும் வகையில், வனத்துறை சார்பில் வரும் ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 2-ஆவது வெள்ளிக்கிழமை மாவட்ட வன அலுவலர் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

## 24 இல் உதகையில் விவசாயிகள் மாநாடு

வன விலங்குகளிடமிருந்து மனித உயிர்களையும், விளைபயிர்களையும் காப்பாற்ற வலியுறுத்தி, விவசாயிகள் சங்கம் சார்பில் உதகையில் வரும் மே 24-ம் தேதி விவசாயிகள் மாநாடு நடைபெற உள்ளது.

இதுகுறித்து சங்க மாநிலத் தலைவர் சிவசாமி வெளியிட்ட அறிக்கை: கோவை அருகே தடாகத்திலும், உதகை, கொடைக்கானலிலும் யானைகள் தாக்கி மனிதர்கள் இறந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் புலி, கரடி, யானைகள் தாக்கியதில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் காட்டு பன்றி, மயில்களால் ஏற்படும் பயிர் சேதங்களும் அதிகரித்து வருகிறது.

கோவை, ஈரோடு, உதகை, வேலூர் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட மக்களை ஒரே அணியில் திரட்டும் பொருட்டு, தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

முதல் கட்டமாக பயிர் மற்றும் உயிர் சேதங்களை தடுக்க வலியுறுத்தி, வரும் மே 24-ம் தேதி உதகை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த விவசாயிகள் மாநாடு நடைபெற உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்க பொதுக்குழுக் கூட்டம்

தென்னை விவசாயிகள், தேங்காய் எண்ணெய் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் நலன் காக்கப்படும் என தேங்காய் பொருள் உற்பத்தியாளர்கள் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.காங்கயத்தில் தேங்காய் பொருள் உற்பத்தியாளர்கள் பொதுக்குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் காங்கயம் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தேங்காய் பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.கூட்டத்திற்கு காங்கயம் தேங்காய் பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் பி.கே.ஜி.பழனிசாமி, செயலாளர் வக்கீல் பசுபதி, தேங்காய் பருப்பு ற்பத்தியாளர்கள் சங்கச் செயலாளர் பாலசுப்பிரமணியம், நிர்வாகக் குழு உறுப்பினர் கே.ஏ.கருப்பசாமி முன்னிலை வகித்தனர்.

தேங்காய் எண்ணெய் தொழில் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் நலிவடைந்து வருவது குறித்தும், தென்னை விவசாயிகள் நலன் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பு உற்பத்தி ஆகிய தொழில்கள் செய்வதில் உள்ள பல்வேறு இடர்ப்பாடுகள் குறித்து பலரும் பேசினர். இந்தியாவிலேயே தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் காங்கயம் இன்று முதலிடம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட தொழில் தற்போது தடுமாற்றத்தில் இருப்பதாக பலரும் வேதனை தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து என்.எஸ்.என்.நடராஜ் கூறியதாவது:

நாட்டின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து தேங்காய்களை வாங்கி தொழில் செய்து வருகிறோம். கடந்த சில காலமாக கடுமையான வறட்சி நிலவியது. இதன் காரணமாக தொழில் மிகவும் நசிந்து போனது. தற்போது பரவலாக தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்துள்ளது.

எனவே, இனி தேங்காய் வரத்து அதிகமாக இருக்கும் என்று நம்பிக்கை உள்ளது. தென்னை விவசாயிகளைப் பொருத்தவரை அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் நாங்கள் என்றும் துணையாக இருப்போம். தென்னை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நலன் காப்பது என்றும், அதே சமயம் நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டே விலை நிர்ணயம் செய்வது என்றும், தேங்காய் பருப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் தொடர்பான விலை நிர்ணயத்தை ஒழுங்குபடுத்துவது எனவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றார்.

## 24 இல் உதகையில் விவசாயிகள் மாநாடு

வன விலங்குகளிடமிருந்து மனித உயிர்களையும், விளைபயிர்களையும் காப்பாற்ற வலியுறுத்தி, விவசாயிகள் சங்கம் சார்பில் உதகையில் வரும் மே 24-ம் தேதி விவசாயிகள் மாநாடு நடைபெற உள்ளது.

இதுகுறித்து சங்க மாநிலத் தலைவர் சிவசாமி வெளியிட்ட அறிக்கை: கோவை அருகே தடாகத்திலும், உதகை, கொடைக்கானலிலும் யானைகள் தாக்கி மனிதர்கள் இறந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் புலி, கரடி, யானைகள் தாக்கியதில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் காட்டு பன்றி, மயில்களால் ஏற்படும் பயிர் சேதங்களும் அதிகரித்து வருகிறது.

கோவை, ஈரோடு, உதகை, வேலூர் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட மக்களை ஒரே அணியில் திரட்டும்

பொருட்டு, தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

முதல் கட்டமாக பயிர் மற்றும் உயிர் சேதங்களை தடுக்க வலியுறுத்தி, வரும் மே 24-ம் தேதி உதகை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த விவசாயிகள் மாநாடு நடைபெற உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

செய்யாறை அடுத்த அளத்துறை கிராமத்தில் விவசாயிகளுக்குப் பண்ணைப் பள்ளி மூலம் அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

அனக்காவூர் வேளாண் விரிவாக்க மையம் சார்பில் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் மூலம் அளத்துறை கிராமத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு ஊராட்சித் தலைவர் ஆனந்தி சீனுவாசன், துணைத் தலைவர் முருகன் ஆகியோர் தலைமை வகித்தனர். இந்தப் பயிற்சியின்போது வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் இளையராஜா, உதவி வேளாண்மை அலுவலர்கள் குமார், புகழேந்தி ஆகியோர் விதை நேர்த்தி குறித்தும், உதவி விதை அலுவலர் சு.சைதன்யம் விதைத் தேர்வு செய்வது குறித்தும், விவசாய சங்கப் பிரதிநிதி ஒ.மாரி உள்ளிட்டோர் செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளித்தனர். முன்னோடி விவசாயிகளான அர்ச்சுனன், சிவசந்திரன், சண்முகம் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் மானிய விலையில் வைக்கோல் திட்டம்: அரியலூர் மாவட்ட விவசாயிகள்**

அரியலூர் மாவட்டத்தில் மானிய விலையில் வைக்கோல் விநியோகம் செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அரியலூர் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து விட்டதன் காரணமாக, தீவனத் தட்டுப்பாடு

ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு, தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு ஒரு கிலோ ரூ. 2 வீதம் மானிய விலையில் "வைக்கோல் வழங்கும்

திட்டத்தை' ஏற்படுத்தி உள்ளது.அரியலூர் கால்நடை மருத்துவமனையில் உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.கால்நடை ஒன்றின்

ஒரு நாள் வைக்கோல் தீவனம் 3 கிலோ வீதம், அதிகபட்சம் 5 மாடுகளுக்கு பெறலாம். மேலும், வாராந்திர தேவையின் அடிப்படையில், 2 முதல் 3 மாதங்களுக்கான தீவனம்

வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அரியலூர் கிடங்குக்கு உலர்ந்த வைக்கோல் போர் அமைத்து வாரம் 25 டன் வீதம் குறிப்பிடப்படும் நாட்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாய விற்பனையாளர்கள்

வரவேற்கப்படுகிறார்கள். மேலும், ஒரு கிலோ வைக்கோல் விலையைக் குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட போட்டி விலைப்புள்ளியினை

(கொட்டேசன்)கொடுக்கலாம்.வைக்கோல் விநியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள் மே 13 ஆம் தேதி பிற்பகல் 5 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியினை "அரியலூர்கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகம் 2 ஆம் தளம், அறை எண் 211, மாவட்ட ஆட்சியர் அலுவலகம்' என்ற முகவரிக்கு நேரிடையாகவோஅல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"மீன் வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்'**

மீன் வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட வேண்டும் என்றார் மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால்.நாகை மாவட்ட மீன்வளத் துறை மற்றும் தேசிய மீன்வளத் துறை மேம்பாட்டு வாரியம் இணைந்து நடத்தும் மீன் வளர்ப்போர் கருத்தரங்கம் மற்றும் தொழில்நுட்ப

கண்காட்சி ஆட்சியர் சு. பழனிசாமி தலைமையில் மயிலாடுதுறையில் சனிக்கிழமை நடைபெற்றது.விழாவில் பங்கேற்று அமைச்சர் மேலும் பேசியது: விவசாயம் செய்யும் இடங்களில் பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கும், மீன் வளர்ப்பிற்கும் மானியத்துடன் நிதியுதவிவழங்கப்படுகிறது. மாவட்டத்தில் மீன் வளர்ப்பிற்கு 853 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ. 72.59 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சராசரியாக ஆண்டு

ஒன்றுக்கு விவசாயிகள் ரூ. 40 ஆயிரம் முதல் ரூ. 50 ஆயிரம் வரை லாபம் பெற்று வருகின்றனர்.உள்நாட்டு மற்றும் கடலோரங்களில் மீன் வளர்ப்போருக்கு உதவிகள் மற்றும் ஊக்கம் அளித்திட ஏதுவாக தமிழக அரசு 31 மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு

முகமைகளை அமைத்துள்ளது. இதன் மூலம் இறால் மீன் வளர்ப்போருக்கு ரூ. 60 ஆயிரம் மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.இதுபோன்ற அரசின் திட்டங்களையும், நவீன தொழில்நுட்பங்களையும் மீன்வளர்ப்பில் பயன்படுத்தி விவசாயிகள் லாபம் அடைய வேண்டும் என்றார்.தொடர்ந்து, முதல்வரின் பொது நிவாரண நிதி மற்றும் மீனவர் விபத்து குழுக் காப்பீட்டுத் திட்டம், தேசிய புரத இணை உணவுத் திட்டம், அரசின் மானிய விலையில்இயந்திரங்கள், இறால் பண்ணைகளுக்கான மானியத் தொகை என 39 பயனாளிகளுக்கு ரூ 27.29 லட்சத்தை அமைச்சர் வழங்கினார்.விழாவில் எம்எல்ஏ எஸ். பவுன்ராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஏ.கே. சந்திரசேகரன், நாகப்பட்டினம் மீன்வளப் பல்கலைக் கழகத்தின் இயக்குநர் நாகூர் மீரான்,ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பா. சந்தோஷ்குமார் (மயிலாடுதுறை), என். தமிழரசன் (குத்தாலம்), கே.வி. ஜெனார்த்தனன் (செம்பனார்கோவில்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.முன்னதாக, மீன்வளத் துறை மண்டல (நாகை) இணை இயக்குநர் மா. சுப்புராஜ் வரவேற்றார். நிறைவில் உதவி இயக்குநர் இரா. கணேசநேரு நன்றி கூறினார்.

### "விவசாய மேம்பாட்டுக்கு வித்திட்டவை உம்பளச்சேரி மாடுகள்'

காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாய மேம்பாட்டு வித்திட்டவை உம்பளச்சேரி மாடுகள் என்றால் அது மிகையில்லை என்றார் திருவாரூர் ஆட்சியர் எம். மதிவாணன்.திருவாரூர் மாவட்டம், கொறுக்கை கிராமத்தில் சனிக்கிழமை பாரம்பரிய கால்நடை இனமான உம்பளச்சேரி கால்நடை இனங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு

கண்காட்சியில் சிறந்த கால்நடைகளுக்கு பரிசு வழங்கி ஆட்சியர் மேலும் பேசியது:

தமிழகத்தில் பசுமை புரட்சியை ஏற்படுத்தியதில் பாரம்பரிய கால்நடைகளுக்கு முக்கிய பங்குண்டு.

காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண்மைக்கு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாக உழவுப் பணிகளுக்கும், பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும்

வகையிலும் இப்பகுதியின் பாரம்பரிய இனமான உம்பளச்சேரி காளைகளும் பசுக்களும் விளங்கின என்றால் அது மிகையாகாது.

உம்பளச்சேரி இன பசுக்கள் குறைந்த அளவு பாலை அளித்தாலும், செறிவு நிறைந்தவையாகவும் நோய் எதிர்ப்பு சக்தி மிக்கவையாகவும் இருந்ததை கால்நடை

ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இந்த பாரம்பரிய இன கால்நடைகள் அழியாமல் பாதுகாக்க வேண்டும். அதற்கு இந்த பகுதி விவசாயிகளும், கால்நடை

வளர்ப்போரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

மேலும், மதுவிற்பனையில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த மாற்றுத் தொழிலாக கால்நடை வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ள

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்படும் நிதி மூலமாக உம்பளச்சேரி இன மாடுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

கால்நடை பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநர் கமலநாதன், மண்டல இயக்குநர் டேவிட், உதவி இயக்குநர்கள் தனபால், லூர்துசாமி, துணை இயக்குநர் ஜோதிராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் மோகன்ராஜ், மன்னார்குடி கோட்டாட்சியர் செல்வசுரபி, வட்டாட்சியர் அன்புமணி, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் ஆர்.கே.பி. நடராஜன்,சி. வேதநாயகி சிங்காரவேலு, உதயகுமாரி தமிழ்ச்செல்வன், பரமேஸ்வரி, கொறுக்கை ஊராட்சித் தலைவர் பூபதி மாரியப்பன், துணைத் தலைவர் முருகையன் உட்பட பலர்கலந்து கொண்டனர். விழிப்புணர்வு கண்காட்சியில் பங்கேற்ற 800 கால்நடைகளில் 24 கால்நடைகள் சிறந்தவையாக தேர்வு செய்யப்பட்டன. 2 கால்நடைகளுக்கு தலா ரூ. 20

ஆயிரமும், மற்ற 22 கால்நடைகளுக்கு ரூ. 1.5 லட்சதத்தையும் ஆட்சியர் வழங்கினார்.

## இலவச மண் பரிசோதனை திட்டத்தில் பயன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

அரசின் புதிய திட்டமான இலவச மண் பரிசோதனை திட்டத்தில் விவசாயிகள் சேர்ந்து பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:விவசாயிகள் தங்கள் பகுதியின் மண் வளமாக இருப்பதை தெரிந்து விவசாயம் செய்தால்தான் முறையான மகசூல் எடுத்து நல்ல லாபம் அடைய முடியும். இதை அடிப்படையாக கொண்டு, மத்திய அரசு உதவியுடன் இலவசமாக மண் பரிசோதனை செய்வதற்கு புதிய திட்டத்தை மாநில அரசு தற்போது செயல்படுத்த உள்ளது.

அதன் அடிப்படையில் வேளாண்மை அலுவலர்கள் கொண்ட குழு, மாவட்டத்தில் விவசாயத்துக்கு ஏற்ற நிலங்கள் கொண்ட 480 கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மண்மாதிரிகள் சேகரித்து பரிசோதனை செய்வார்கள். அதன்பேரில் விவசாயிகளுக்கு மண் வள அட்டை இலவசமாக வழங்கப்பட உள்ளது. உரப் பரிந்துரையும்

அளிக்கப்படும்.இதனால் விவசாயிகள் தங்களுடைய மண்ணின் தன்மையை முறையாகத் தெரிந்து கொண்டு உரங்களை இடலாம். இதனால் உரச் செலவு மிகவும் குறைய வாய்ப்பு உள்ளது.

எனவே, வேளாண்மை துறை மற்றும் வேளாண்மை பல்கலைக்கழக பரிந்துரையைப் பெற்று விவசாயம் செய்ய வேண்டும் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை முறைப்படுத்த வேண்டும்

விழுப்புரம் மாவட்டத்தில் அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை முறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் மாவட்டத் தலைவர் என்.சிவராமன், மாவட்டச் செயலர் என்.சுப்பிரமணியன் ஆகியோர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

தஞ்சை-நாகை மாவட்டங்களுக்கு இணையாக விழுப்புரம் மாவட்டத்தில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்வதற்கு கொண்டு செல்லும்போது, அங்குள்ள அதிகாரிகள் வியாபாரிகளுடன் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு விலையைக் குறைத்து நிர்ணயிக்கின்றனர். மேலும், விவசாயிகள் விற்பனை செய்த பொருட்களுக்கு ஒரு மாதம் கழித்து பணம் பட்டுவாடா செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு பெரும் சிரமம் ஏற்படுகிறது.

இந்த நிலையை போக்க மத்திய அரசு அறிவித்த குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் மாநில அரசு அறிவித்த ஊக்கத் தொகையும் சேர்த்து 1 குவிண்டால் சன்ன ரகத்துக்கு ரூ.1,470-ம், மோட்டா ரகத்துக்கு ரூ.1,410-

ம் விவசாயிகளுக்கு கிடைத்திட மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்தது.

இந்த கோரிக்கையை சட்டப்பேரவையிலும் முன்வைத்து விக்கிரவாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.ராமமூர்த்தி பேசினார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் தீவனூர், ஆலம்பூண்டி, திருவம்பட்டு, சித்தலிங்கமடம், திருநாவலூர், காணை, தேவபாண்டலம் ஆகிய 7 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களைத் தொடங்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

நெல் கொள்முதல் நிலையங்கள் அரவை தொடங்கப்பட்ட நோக்கத்துக்கு மாறாக விவசாயிகளிடமிருந்து நெல்லை அடிமாட்டு விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

மேலும் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்த பிறகு நான்கைந்து நாள்கள் காக்க வைத்து இழுத்தடிக்கும் நிலையும் உள்ளது.

இந்த அவலநிலையை போக்க மாவட்ட ஆட்சியர் தலையிட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படும் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை இழுத்தடிப்பின்றி நேரடியாக கொள்முதல் செய்வதற்கு உத்தரவாதம் செய்ய வேண்டும் என்றார்.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

## ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு: காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணிகள் தீவிரம் இந்த ஆண்டுக்குள் முடிக்க அதிகாரிகள் திட்டம்



பொள்ளாச்சி,

ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதால், காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணிகள் தீவிரமடைந்து உள்ளது. இந்த ஆண்டிற்குள் பணிகளை முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

<u>காண்டூர் கால்வாய்</u>

வால்பாறையில் உள்ள சோலையார் அணையில் திறக்கப்படும் தண்ணீர் பரம்பிக்குளம் அணை வழியாக சர்க்கார்பதிக்கு வருகிறது. அங்கிருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப்படுகிறது. காண்டூர் கால்வாய் 49.30 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இந்த கால்வாய் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகி விட்டதால், பல இடங்களில் மரங்களின் வேர் ஊடுருவல் மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக சேதமடைந்தது. இதனால் சர்க்கார்பதியில் திறந்து விடப்படும் தண்ணீரில் வினாடிக்கு 400 கன அடி தண்ணீர் வீணாகியது.

இதையடுத்து காண்டூர் கால்வாயை சீரமைக்க அரசு ரூ.184.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது.

இதைத்தொடர்ந்து ஆண்டிற்கு 6 மாதம் கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும், 6 மாதம் பணிகள் நடைபெறும். கால்வாயில் அதிகம் பழுதடைந்த பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் நிதி பற்றாக்குறையால் பணிகள் தாமதம் ஆகி வந்தது. இந்த நிலையில் 3–ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்ட பின், கடந்த மாதம் 26–ந்தேதி நிறுத்தப்பட்டு காண்டூர் கால்வாயில் சீரமைக்கும் பணிகள் தொடங்கி, தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு உள்ளனர்.

<u>70 சதவீத பணிகள் முடிந்தன</u>இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:–

காண்டூர் கால்வாய் பணிகள் நிதி பற்றாக்குறையால் தாமதம் ஆகி வந்தது. இந்த நிலையில் அரசுக்கு ரூ.40 கோடி கேட்டு கருத்துரு அனுப்பினோம். அந்த நிதி வந்து விட்டது. தற்போது காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணி 70 சதவீதம் முடிந்து விட்டது. இன்னும் 30 சதவீத பணிகள் தான் மீதமுள்ளது. மழை, இயற்கை சீற்றங்கள் போன்ற தொந்தரவு இல்லாமல் இருந்தால் இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகளை முடிக்க திட்டமிட்டு உள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பலத்த சூறைக்காற்றுடன் மழை



தர்மபுரி மாவட்டத்தில் கோடை வெயில் 100 டிகிரியை தாண்டி கொளுத்தியது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகினர். ஆனால் கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக இடி மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. இந்தநிலையில் நேற்று தர்மபுரி ,பென்னாகரம், பாலக்கோடு, ஒகேனக்கல், பெரும்பாலை, ஏரியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் திடீரென மழை பெய்தது. குறிப்பாக பென்னாகரம் பகுதியில் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக பெய்த இந்த மழையால் மழைநீர் தாழ்வான பகுதிகளில் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஊட்டி ரோஜா மலர் கண்காட்சி நிறைவு: 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்



ஊட்டியில் 2 நாட்கள் நடைபெற்ற ரோஜா மலர் கண்காட்சியை 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்.

14–வது ரோஜா கண்காட்சி

கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி ரோஜா பூங்காவில் நேற்று முன்தினம் 14–வது ரோஜா மலர் கண்காட்சி நடைபெற்றது. இந்த மலர் கண்காட்சியை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். கண்காட்சியில்

பல்வேறு ரோஜா மலர்களை கொண்டு உருவாக்கப்பட்ட குதிரை, சிங்கம், பாண்டா கரடி ஆகியவற்றை சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர்.

மேலும், மலர் கண்காட்சியின் சிறப்பு அம்சமாக 30 ஆயிரம் ரோஜா மலர்களை கொண்டு பரதநாட்டியம் ஆடும் மங்கைகளின் உருவம் தத்ரூபமாக அமைக்கப்பட்டு இருந்தது. இதன் அருகே நின்று ஏராளமான சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்து கொண்டனர்.

40 ஆயிரம் சுற்றுலா பயணிகள்

2–வது நாளான நேற்று ரோஜா கண்காட்சியை காண ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இதனால் ரோஜா பூங்கா முழுவதும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் தான் காணப்பட்டது. 2 நாட்களில் ரோஜா மலர் கண்காட்சியை 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்ததாக அதிகாரி ஒருவர் கூறினார்.ஊட்டிக்கு சுற்றுலா பயணிகள் ஏராளமான வாகனங்களில் வந்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போலீசார் உடனுக்குடன் போக்குவரத்தை சீரமைத்தனர்.

பரிசளிப்பு விழா

இந்த நிலையில், ஊட்டி ரோஜா பூங்காவில் நேற்று மாலை 4 மணியளவில் ரோஜா கண்காட்சி நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் சங்கர் தலைமை தாங்கி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். பின்னர் அவர் பேசும் போது கூறியதாவது:–கோடை விழாவின் ஒரு பகுதியாக இந்த மலர் கண்காட்சி நடைபெறுகிறது. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ரோஜா மலர்கள் பயன்பாட்டிற்கு வந்தன. இந்த மலர்களை கொண்டு ஆயுர்வேதத்தில் பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்பட்டன. தற்போது இந்த மலர்கள் அலங்காரத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

<u>சர்வதேச பூங்காக்களில் ஒன்றாக தேர்வு</u>

ஊட்டி ரோஜா பூங்காவில் தற்போது 4 ஆயிரம் ரகங்களை சேர்ந்த 30 ஆயிரம் மலர் செடிகள் உள்ளன. இதில் 120 ரோஜாக்கள் பாராம்பரியமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2014–ம் ஆண்டு இந்த பூங்காவிற்கு வந்த உலக ரோஜா சம்மேளன குழுவினர் இந்த பூங்காவை சர்வதேச பூங்காக்களில் ஒன்றாக அறிவித்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.இந்த விழாவில் சிறந்த பூங்காவிற்கான விருதுகளை குட்செப்பேர்டு பள்ளி, மனித உடற்கூறு ஆராய்ச்சி மையம், ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனம் ஆகியவை தட்டி சென்றன. மேலும் சிறந்த அரங்குகள் அமைத்தவர்களுக்கு பரிசு கோப்பைகள் வழங்கப்பட்டன. இதில், மொத்தம் 37 சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டது. இதேபோல் தோட்டக் கலை துறை அரங்குகளுக்கு பரிசு கோப்பைகளும் வழங்கப்பட்டன.இந்த விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் மேனகா, ரோஜா சங்க தலைவர் கிருஷ்ணகுமார், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சிவசுப்பிரமணி, உதவி இயக்குனர்கள் மீராபாய், உமாராணி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சரக்கு ரெயிலில் 2,500 டன் உர மூட்டைகள் திருச்சி வந்தன



மராட்டிய மாநிலம் மும்பையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 42 வேகன்களில் 2,500 டன் யூரியா உர மூட்டைகள் நேற்று திருச்சி வந்தன. இதில் 640 டன் உர மூட்டைகள் காந்திமார்க்கெட் அருகே உள்ள மாநில அரசின் நுகர்பொருள் வாணிப கழக குடோனுக்கும், மீதமுள்ள 1,860 டன் உர மூட்டைகள் தனியார் நிறுவனத்திற்கும் வந்ததாகும். குட்ஷெட் யார்டில் ரெயிலில் இருந்து உர மூட்டைகளை சுமை தூக்கும் தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றி மாநில அரசின் நுகர்பொருள் வாணிப கழக கிடங்கிற்கும், தனியார் நிறுவனத்திற்கும் கொண்டு சென்றனர்.

## ஆற்றுப்பகுதிகளில் 5 கிலோமீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் விவசாயிகள் கூட்டத்தில் தீர்மானம்




ஆற்றுப்பகுதிகளில் 5 கிலோமீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்று விவசா யிகள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஆலோசனை கூட்டம்திருவண்ணாமலை மாவட் டம், ஆரணியில் அனைத்து விவசாயிகள், தன்னார் வலர் கள் இணைந்து செய்யாற்றை

காப்போம் என்ற தலைப்பில் ஆலோசனை கூட்டம் நடத் தினர். விவசாய சங்க தலைவர் ஏ.சவுந்தர்ராஜன் தலைமை தாங்கினார்.பொது செயலாளர் எஸ்.சச்சிதானந்தம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக பாலாற்று பாதுகாப்பு கூட்டு இயக்க ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன், தமிழக விவ சாயிகள் சங்க மாவட்ட செய லாளர் புருஷோத்தமன், ஆழி செந்தில்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். தடுப்பணை அப்போது செய்யாற்றில் தடுப்பணைகள் கட்டுவது, செய்யாறு -தென் பெண்ணை ஆறுகள் இணைப்பு, நிலத்தடி நீர் ஆதாரத்தை அழிக்கும் மணல் திருட்டை தடுத்து நிறுத்துவது, நீர் வளங்களை காப்பது குறித்து விளக்கினர்.மேலும் கூட்டத்தில் மணல் கொள்ளையை தடுத்து ஏரி குளங்களில் மராமத்து பணி கள் மேற்கொள்ள வேண்டும், ஆற்று பகுதிகளில் 5 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்டி தரவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டன.

தினகரன்

**ஊட்டி ரோஜா கண்காட்சி - 30 ஆயிரம் ரோஜாக்களால் பரதநாட்டிய அலங்கார வடிவம் உருவாக்கப்பட்டது**



ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் 14–வது ரோஜா கண்காட்சி தொடங்கியது. இங்கு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 4 ஆயிரம் வகையான 27 ஆயிரம் ரோஜா மலர்கள் பூத்து குலுங்குகிறது.ரோஜா கண்காட்சியில் மேடையுடன் கூடிய பரதநாட்டியம் அலங்கார வடிவம் 30 ஆயிரம் பல்வேறு வண்ண ரோஜா மலர்களால் 16 அடி உயரம், 15 அடி நீளம், 8 அடி அகலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் 6 ஆயிரம் பல்வேறு வண்ண ரோஜா மலர்களால் 7 அடி நீளம், 6 அடி உயரம், 3 அடி அகலத்துடன் குதிரை வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 8 ஆயிரம் மலர்களை கொண்டு 8 அடி நீளம், 6 அடி உயரம், 3 அடி அகலத்துடன் பிரமாண்ட சிங்கம் அமைக்கப்பட்டு இருக்கிறது

**ஏலக்காய் , கிராம்பு, பட்டை உள்ளிட்ட 45 வகை வாசனை பொருட்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட கப்பல் !!**




நீலகிரி மாவட்டம் கூடலூரில் தோட்டக்க லைத்துறை சார்பில் வாசனை பொருட்கள் கண்காட்சி நடந்தது. இதில், ஏலக்காய் , கிராம்பு, பட்டை உள் ளிட்ட 45 வாசனை பொருட்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட கப்பல் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

**எள், முருங்கை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

கரூர், : முருங்கை, எள் பயிர் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கரூரில், நபார்டு வங்கி உதவியுடன் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம், கரூர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் முருங்கை, மற்றும் எள் பயிருக்கான உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் கண்டுணர் பயணம் நடைபெற்றது. வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் தமிழ்செல்வி வரவேற்று பேசினார். முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன் தலைமை வகித்தார். நபார்டு வங்கி துணைப் பொதுமேலாளர் பார்த்திபன், வேளாண் இணை இயக்குனர் (பொ) மதனகோபால், தோட்டக்கலை துணை இயக்குனர் வளர்மதி, ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் தமயந்தி, கூட்டுறவு இணைப் பதிவாளர் சந்தானம், கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் அகிலா, முன்னோடி விவசாயி மதியழகன், ஆகியோர் பேசினர். வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் திரவியம், தொழில்நுட்ப வல்லுனர் தோட்டக்கலை கவியரசு, ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றினர். தொழில்நுட்ப வல்லுனர் தமிழ்செல்வி நன்றி கூறினார்.

தினமணி

**வறட்சிக்குப் பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட்டத்தில் பழத்தோட்டம்: வளமான பூமியாக மாற்றிய பஞ்சாப் விவசாயிகள்**



பழத் தோட்டத்தில் தர்சன் சிங் உள்ளிட்ட பஞ்சாப் விவசாயிகள்.

வறட்சியான லாந்தையில் பசுமை நிறைந்த பழத்தோட்டம்.

வானம் பார்த்த பூமியான ராமநாத புரம் மாவட்டத்தில் பழத்தோட் டங்கள் அமைத்து வளமான பூமி யாக மாற்றி நல்ல விளைச்சல் கண்டுள்ளனர் பஞ்சாப் விவசாயி கள்.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டத்தில் உள்ளது லாந்தை ஊராட்சி. ராமநாதபுரத்தில் இருந்து பார்த்திபனூர் சென்று, அங்கிருந்து அபிராமம் என மாறிமாறி பேருந்து பயணம். அபிராமத்தில் இருந்து லாந்தை கிராமத்துக்கு பேருந்து கள் இல்லாததால் ஷேர் ஆட்டோ வில் சாலையின் இருபுறமும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சீமை கருவேலம் மரங்கள் சூழ்ந் திருப்பதை பார்த்தவாறு, லாந்தை ஊராட்சியை நெருங்கியதும் முற்றிலும் புதிய உலகில் நுழைந் ததைப்போல வரவேற்கிறது பஞ்சாப் விவசாயிகளின் அகல் சேவா பழத்தோட்டம்.

பழத்தோட்டத்தில் நுழைந்ததும் 66 வயதான சரப்ஜி சிங் கையில் இருந்த மண்வெட்டியை முந்திரி மரம் அருகே வைத்துவிட்டு அழகிய தமிழில் வணக்கம் கூறி வரவேற் றார். `ரொம்ப தூரத்தில் இருந்து வந்திருக்க... தாகமாக இருக்கும்... முதலில் தோட்டத்து முந்திரி பழம் சாப்பிடு... பொறுமையாக பேசுவோம்' என்று உபசரித்துவிட்டு பேசத் தொடங்கினார்.

`மொத்தம் 300 ஏக்கர் நிலம். இதில் பஞ்சாபை சேர்ந்த 20 பேர் விவசாயம் செய்றோம். மாம்பழம், பலாப்பழம், கொய்யா, நெல்லி, சப்போட்டா, தென்னை, முந்திரி, சீதா, மாதுளை, எலுமிச்சை, ஈச்சம்பழம், பப்பாளி என இப்பகுதியில் நன்கு வளரக்கூடிய வகைகளை தேர்ந்தெடுத்து, கடந்த 5 ஆண்டுகளாக வளர்த்து வருகி றோம்.

இது தவிர தர்ப்பூசணி, வெள்ளரி எனப் பருவத்துக்கேற்ற தோட்டப் பயிர்களையும் வளர்க்கிறோம் என மூச்சு விடாமல் பேசிக்கொண்டே, தோட்டங்களை சுற்றிக் காட்டினார் சரப்ஜி சிங்.

ஒரு கி.மீ. நடந்த பின்னர், டிராக்டரில் இருந்து இறங்கி வந்து வரவேற்ற 60 வயதான தர்சன் சிங், 'ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்துக்கு நானும், நண்பர் மன்மோகன் சிங்கும் முதலில் வந்தோம். இந்த இடம் முழுவதும் கருவேலம் மரங்களாக அப்போது இருந்தது. ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சுத்தம் செய்யவே 3 மாதம் ஆயிடுச்சு. ஆரம்பத்தில் உள்ளூர் கிராம மக்கள் கருவேல மரங்களை அகற்றி விட்டு சிங்குகள் என்ன செய்யப் போறாங்கன்னு கேலியாக பேசினர்.

கொஞ்சம் கொஞ்சமா மரங்கள் வளர ஆரம்பிச்சு போன வருஷம் மாம்பழம் 6 டன், கொய்யா 3 டன், பப்பாளி, பலாப்பழம், முந்திரி ஆகியவை 5 டன் என்று உற்பத்தி செய்த பழங்களை ஏற்றுமதி செய்தோம்.பின்பு உள்ளூர் கிராம மக்கள் தங்களோட நிலங்களில் உளுந்து, மிளகாய், கடலைன்னு நம்பிக்கை யோட விவசாயம் செய்ய ஆரம் பிச்சிருக்காங்க. இப்ப எங்கள் தோட்டத்தில் பத்து உள்ளூர் விவசாயிகளுக்கும் வேலை கொடுத் திருக்கிறோம்' என்றார்.பஞ்சாப் விவசாயத்துக்கு பெயர் பெற்ற மாநிலம். இருந்தும் தமிழகத் தில் மிகவும் வறட்சியான ராமநாதபு ரத்தை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் எனக் கேட்டதற்கு தர்சன் சிங் மீண்டும் பேசத் தொடங்கினார்.பஞ்சாபில் ஒரு ஏக்கர் விவ சாய நிலம் குறைந்தது ரூ. 20 லட் சத்தில் இருந்து ஆரம்பிக்கும். இங்கே அதே விலையில் 100 ஏக்கர் நிலம் வாங்க முடியும். பழத்தோட்டத்துக்கு தேவையான தண்ணீரை கிணறுகள் அமைத்து, அதில் இருந்து சொட்டுநீர் பாசன முறைகளை பயன்படுத்துறோம். கிடைக்கும் மழை நீரை குளம் அமைத்தும் சேகரித்துக் கொள் வோம். மண்ணில் வறட்சி என்று எதுவும் கிடையாது. பாலைவன மாகவே இருந்தாலும் அங்கேயும் சில தாவரங்களும், மரங்களும் வளரும். வறட்சி நம் மனதில்தான் இருக்கக்கூடாது என அர்த்தமாய் சிரித்தார் தர்சன் சிங்.___

தேனீ வளர்ப்பில் புதுமை சாதிக்கும் முன்னாள் பொறியாளர்



பல ஆயிரம் சம்பளம், பதவி உயர்வு, வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஆகியவற்றை அளித்த மென்பொருள் துறையைக் கைவிட்டுவிட்டு, தேனீ வளர்ப்பில் பல புதுமைகளைச் செய்துவருகிறார் கிருஷ்ணமூர்த்தி.

கரூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, பொறியியல் பட்டதாரி. படித்து முடித்ததும், பெங்களூரு, சென்னை ஆகிய பெருநகரங்களில் மென்பொருள் துறையில் பல ஆயிரம் ஊதியத்தில் பணியாற்றிவந்தார். பெருநகர வாழ்க்கை, மென்பொருள் துறையின் அழுத்தம் காரணமாக வேலையைத் தொடர அவருக்கு விருப்பமில்லை. குடும்பத்தினர் எதிர்ப்பை மீறி வேலையைத் துறந்தார். மனம் தளராமல், தனது தேடுதலைத் தொடர்ந்தார்.

**தேடல் நிறைவு**

ஓராண்டு காலத் தேடலில் அவருக்குக் கிடைத்ததுதான் தேனீ வளர்ப்பு. வெளிநாடுகளில் வேலை பார்க்கும் அவருடைய நண்பர்கள் மூலம், இது தொடர்பான பல்வேறு தகவல்களைத் திரட்டினார். எந்த முன்அனுபவமும்

இல்லாமல் மூன்று ஆண்டுகளுக்கு முன் தேனீ வளர்ப்பில் இறங்கினார். அதில் அவர் சந்தித்த பல்வேறு பிரச்சினைகளுக்கு யாரும் தீர்வு தரவில்லை. தனக்குக் கிடைத்த அனுபவத்தில் இருந்து, அவரே ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வைக் கண்டறிந்தார்.

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி, திருப்பூர் மாவட்ட எல்லைப் பகுதியில் உள்ள விவசாயத் தோட்டங்களில் தேன் உற்பத்தி மேற்கொண்டுவருகிறார். இதற்காக இத்தாலியத் தேனீக்களை வாங்கியிருக்கிறார்.

**பல வகை தேன்**

தேனீ வளர்ப்பில் தனித்தன்மையை விரும்பிய அவர், ஒரே வகையான மலர்களில் இருந்து பெறப்படும் தனித்தன்மை வாய்ந்த தேனை உற்பத்தி செய்ய முடிவெடுத்தார். ஒரே வகை மலர் தேனைப் பெறுவதற்காகக் கொத்தமல்லி, செங்காந்தாள், மா, முருங்கை, சூரியகாந்தி, வேம்பு உள்ளிட்ட பல வகையான தேனைத் தற்போது உற்பத்தி செய்துவருகிறார்.ஒவ்வொரு வகை மலரில் இருந்து பெறப்படும் தேனுக்கும் வித்தியாசமான மணம், நிறம், சுவை இருக்கும். எந்த வகை மலர்களில் இருந்து தேனைச் சேகரிக்க விரும்புகிறாரோ, அந்தத் தாவரம் அதிகமுள்ள தோட்டங்களில் தேனீ வளர்க்கும் பெட்டிகளை வைத்துத் தேனைச் சேகரிக்கிறார்.இதன் மூலம் பயிர் உற்பத்தி 30 சதவீதம்வரை அதிகரிக்கிறது. தேனீக்கள் மகரந்தச் சேர்க்கைக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பதால், தங்கள் தோட்டத்தில் தேனீ பெட்டியை வைக்க விவசாயிகள் விருப்பம் தெரிவிக்கிறார்கள். தேனீ வளர்ப்பு குறித்துப் பயிற்சியும் வழங்கி வருகிறார்.

**நல்ல விலை**

பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்ட தேன், பாரம்பரிய மருத்துவ முறைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வயதுக்கும் குறைவான

குழந்தைகளுக்கான சிறப்புத் தேனையும் கிருஷ்ணமூர்த்தி உற்பத்தி செய்துவருகிறார். தரமான தேன் என்றால் நல்ல விலை கொடுக்க வாடிக்கையாளர்கள் தயங்குவதில்லை.

மக்களுக்கு நியாயமான விலையில் தேனை வழங்கவும், உற்பத்திச் செலவு கட்டுப்படியாகவும் தானே நேரடியாகத் தேன் விற்பனையை மேற்கொண்டுள்ளார். தேன் கிலோ விலை ரூ. 716. ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்பவர்களுக்குப் பார்சல் மூலம் தேனை வீட்டுக்கு அனுப்புகிறார். ***இணையதளம்: www.honeykart.com, கிருஷ்ணமூர்த்தி தொடர்புக்கு: 91503 70525***

பூச்சிக்கொல்லிகள் நம் உடலுக்குள் என்ன செய்கின்றன?

பூச்சிக்கொல்லிகள் மனிதர்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி 'பூச்சிக்கொல்லிகள்: சில முக்கிய தகவல்கள்' நூலில் இருந்து ஒரு பகுதி:

**பூச்சிக்கொல்லிகள் மனிதர்களுக்கு எப்படி தீங்கு விளைவிக்கின்றன?**

பாதுகாப்புச் சாதனங்கள் இல்லாமல் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவது, பூச்சிக்கொல்லிகளைத் தெளித்தவுடன் வயல்களில் வேலை செய்வது, பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவது ஆகிய செயல்பாடுகளின் மூலம் மண், தண்ணீர், காற்று, உணவு போன்றவற்றின் வழியாக பூச்சிக்கொல்லிகள் உடலுக்குள் ஊடுருவி மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன.

# நுரையீரல், ஜீரண மண்டலம், தோல் ஆகியவற்றின் வழியாகப் பூச்சிக்கொல்லிகள் நமது உடலுக்குள் செல்கின்றன. சில பூச்சிக்கொல்லிகள் உடல்நலனை உடனடியாகப் பாதிக்கின்றன. வேறு சில, கொஞ்சம் கொஞ்சமாக நமது உடலில் வருடக்கணக்கில் சேர்ந்து பாதிப்பை உண்டாக்குகின்றன.

# தலைவலி, மங்கலான பார்வை, தலைசுற்றல், வாந்தி, இயல்பற்ற மார்புத் துடிப்பு, தசைத் தளர்வு, மூச்சுத் திணறல், மனக்குழப்பம், வலிப்பு, கோமா, இறப்பு போன்றவை உடனடியாக ஏற்படும் பாதிப்புகள்.

# பூச்சிக்கொல்லிகள் கொஞ்சம் கொஞ்சமாக உடலில் சேர்வதால் புற்றுநோய், நரம்பு மண்டல நோய்கள், கல்லீரல், பிறப்புறுப்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுகின்றன. இந்த பிரச்சினைகள் வெளியே தெரிவதற்குப் பல ஆண்டு காலம் ஆகிறது. அதற்குப் பிறகு எந்த நோய் எந்தக் கொல்லியால் ஏற்பட்டது என்று கண்டுபிடிப்பது கடினமாகிவிடுகிறது.

# ஒரு சில பூச்சிக்கொல்லிகள் கருவில் வளரும் சிசுவை பாதித்துக் கருச்சிதைவை உண்டாக்கலாம். குறை பிரசவம், பிறவிக் குறைபாடுகள் போன்றவற்றுக்குக் காரணமாகலாம். மரபணுக்களில் மாறுபாட்டை ஏற்படுத்தி, நமது குழந்தைகளுக்கு பாதிப்பை உண்டாக்கலாம்.

**பூச்சிக்கொல்லி ஏற்படுத்தும் பாதிப்புகள்:**

1. டி.டி.டி. (D.D.T.) – இந்தப் பூச்சிக்கொல்லி, எல்லா வகை பூச்சிகளையும் கட்டுப்படுத்துகிறது. கல்லீரல் பாதிப்பு, நாளமில்லா சுரப்பி கோளாறு (Endrocrine disorder), இனப்பெருக்க பாதிப்பு, தடுப்பாற்றல் குறைவு, மார்புப் புற்றுநோய், நரம்பு அழற்சி போன்றவற்றை ஏற்படுத்தும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2. என்டோசல்ஃபான் (Endosulphan) – இந்த பூச்சிக்கொல்லி, பயிர்களைத் தாக்கும் பூச்சிகளின் உடலில் ஊடுருவி கட்டுப்படுத்துகிறது. இது கருவிலிருக்கும் குழந்தை, கல்லீரல் பாதிப்பு, தடுப்பாற்றல் குறைவு, புற்றுநோய், ஆணுறுப்பில் பாதிப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும்.

3. டைஎல்டரின் (Dieldrin) – இந்த பூச்சிக்கொல்லி, விளக்குப் பூச்சிகள், கால்நடைகளைத் தாக்கும் பூச்சிகள், துணிகளைத் தாக்கும் பூச்சிகள், கேரட், முட்டைகோஸ் ஆகிய காய்கறிகளைத் தாக்கும் வேர் புழுக்கள்

ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. இந்த பூச்சிமருந்தை பயன்படுத்துவதால் கல்லீரலைத் தாக்கும் நோய்கள், பார்கின்சன் நோய், அல்சீமர் நோய் (Alzheimer’s disease) ஆகியவை ஏற்படுகின்றன.

**பூச்சிக்கொல்லிகளால் எவ்வளவு பேர் பாதிக்கப்படுகின்றனர்?**

ஐக்கிய நாடுகள் அமைப்பு 1983-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் பூச்சிக்கொல்லிகளால் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 40,000 பேர் இறக்கின்றனர். பாதிக்கப்படுபவர்களில் பாதி பேரும், இறப்பவர்களில் முக்கால்வாசிப் பேரும் வளரும் நாடுகளில் வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், 2004-ம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியின்படி, ஆண்டுதோறும் சுமார் 30 லட்சம் பேர் பூச்சிக்கொல்லிகளால் பாதிக்கப்படுகின்றனர். இதில் சுமார் 2.5 லட்சம் பேர் இறக்கின்றனர்.

**நாம் உண்ணும் உணவு பூச்சிக் கொல்லிகளால் பாதிக்கப்பட்டுள்ளதா?**

உண்ணும் உணவின் மூலமாகவும் குடிக்கும் நீரின் மூலமாகவும் பல்வேறு பூச்சிக்கொல்லிகள் நம் உடலை வந்தடைகின்றன. அதிகபட்ச பூச்சிக்கொல்லி எச்சம், அனுமதிக்கப்படக்கூடிய தினசரி அளவு போன்ற அளவுகள் அரசுகளால் நிர்ணயிக்கப்பட்ட அளவு. பூச்சிக்கொல்லிகள் மனிதர்களைப் பெரிதாக பாதிப்பதில்லை என்று நம்பச் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவுகள் இவை. ஒரு குறிப்பிட்ட அளவுவரை பூச்சிக்கொல்லிகள் நம் உடலுக்குள் செல்வது பாதுகாப்பானது அல்லது ஆபத்தற்றது என்று உறுதியாகக் கூறமுடியாது.

நாம் சாப்பிடும் உணவு வகைகள் நபருக்கு நபர், கலாசாரத்துக்குக் கலாசாரம் வேறுபடுகிறது. குறிப்பிட்ட பூச்சிக்கொல்லி, ஊட்டம் மிகுந்த ஒருவரை பாதிக்காமல் இருக்கலாம். ஏனெனில், அவருடைய உடலில் இந்தப் பூச்சிக்கொல்லியின் விஷத்தை எதிர்க்கும் திறன் இருக்கலாம்.

ஆனால், அதேநேரம் சிறு குழந்தைகளும் ஊட்டக்குறைவு உள்ளவர்களும் நஞ்சை எதிர்க்கும் திறனுடன் இல்லாததால், அவர்கள் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம்.

மேலும், இந்த அளவுகள் இரண்டு பூச்சிக்கொல்லிகள் ஒன்று சேரும்போது ஏற்படும் விளைவுகளையும், பூச்சிக்கொல்லிகள் முறியும்போது வெளிப்படும் முறிபொருள்களையும் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால், உணவுப் பொருட்களில் எச்சம் சேர்கிறது.

எல்லா உணவுப் பொருட்களிலும் பூச்சிக்கொல்லி எச்சத்தின் அளவு அதிகரித்துள்ளதாக 1999-ம் ஆண்டு இந்தியாவில் நடந்த ஆய்வு தெரிவிக்கிறது. உணவுப் பொருட்களில், பரிந்துரைக்கப்பட்ட "அதிகபட்ச பூச்சிக்கொல்லி எச்ச அளவை"விட, 20 சதவீதம் அதிகமாக உள்ளது. உத்திரப் பிரதேசம், கேரள மாநிலங்களில் விளையும் விளைப்பொருட்களில், பூச்சிக்கொல்லி எச்சம் பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட 40 சதவீதம் அதிகமாக உள்ளது. அதேபோல் பாலில், லின்டேன் (Lindane) என்ற பூச்சிக்கொல்லி 78 சதவீதமும், டி.டி.டி. 43.4 சதவீதமும் அதிகபட்ச பூச்சிக்கொல்லி எச்ச அளவைவிடவும் கூடுதலாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2001-ம் ஆண்டு, அகில இந்திய ஆராய்ச்சித் திட்ட (All India Coordinated Research Project) அறிக்கையின்படி, பழங்கள் மற்றும் காய்கறிகளில் உள்ள எச்சம், அதிகபட்ச பூச்சிக்கொல்லி எச்ச அளவைவிட 61 சதவீதம் கூடுதலாக இருப்பது தெரியவந்துள்ளது. **பூச்சிக்கொல்லிகள்: சில முக்கிய தகவல்கள்,** *கே.விஜயலட்சுமி, லலிதா சக்திவேல் வெளியீடு: இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், தொலைபேசி 044- 2447 1087.*

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## தென்மேற்கு பருவமழை ஜூன் 1–ந்தேதி தொடங்கும்

சென்னை, மே.11–

ஒவ்வொரு ஆண்டும் அக்னி நட்சத்திரம் தொடங்கியதும் கோடை வெயில் வறுத்து எரித்துவிடும்.

இந்த ஆண்டு அக்னி நட்சத்திரம் கடந்த 4–ந்தேதி தொடங்கியது என்றாலும் முந்தைய ஆண்டுகளை போல வெயிலின் தாக்கம் அதிக அளவு இல்லை. சென்னை உட்பட பெரும்பாலான மாவட்டங்களில் வெயில் அளவு குறைவாகவே இருந்தது. பல்வேறு மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

அக்னி நட்சத்திரம் தொடங்கி விட்டதால் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது வெயில் அளவு குறைந்து காணப்படுகிறது. நேற்று சென்னை, வேலூர், திருச்சி, சேலம், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் வெயில் அளவு 95 முதல் 97 டிகிரி வரைதான் பதிவாகி உள்ளது.

வழக்கமாக தென்மேற்கு பருவமழை மே மாதம் கடைசியில் தொடங்கும். நாட்டின் பெரும்பாலான பகுதிகள் தென்மேற்கு பருவமழை காலத்தில்தான் அதிக பயன்பெறுகின்றன.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வருகிற ஜூன் மாதம் 1–ந்தேதி தொடங்க வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை 12 சதவீதம் குறைவாகவும் பெய்தது. இதனால் பெரும்பாலான மாநிலங்களில் பயிர் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த ஆண்டு வழக்கத்தை விட தென்மேற்கு பருவ மழையின் அளவு குறைவாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. வருகிற 1–ந்தேதி பருவமழை தொடங்க இருப்பதாலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருவதாலும் இந்த ஆண்டு கத்திரி வெயில் பாதிப்பு குறைவாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கேரளாவில் கனமழை: மீனவர்களுக்கு எச்சரிக்கை**

திருவனந்தபுரம், மே. 11–

கேரளாவில் கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் கனமழை பெய்து வருகிறது. நேற்று திருவனந்தபுரம், வயநாடு, கொல்லம், கொட்டாரகரா, மலப்புரம், பத்தனம்திட்டா ஆகிய பகுதிகளில் பலத்த மழை கொட்டி தீர்த்தது. இங்கு 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இதனால் பல இடங்களில் சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல பெருக்கெடுத்து ஓடியது. திருவனந்தபுரத்தில் தம்பானூர் பகுதியில் சாலைகளில் மரங்கள் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பஸ் நிலையம் பகுதியில் தண்ணீர் அதிகளவில் தேங்கியதால் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் அவதிக்கு ஆளானார்கள்.

கேரளாவில் தொடர்ந்து வருகிற 15–ந் தேதி வரை கனமழை நீடிக்கும் என்று வானிலை மையம் எச்சரித்து உள்ளது. மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் கேட்டு கொள்ளப்பட்டு உள்ளனர்.

## கிர் காடுகளில் சிங்கங்களின் எண்ணிக்கை 523 ஆக உயர்வு: கணக்கெடுப்பில் ஆச்சர்ய தகவல்

குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் காடுகளில் 14-வது ஆசிய சிங்கங்களின் கணக்கெடுப்பு கடந்த வாரம் வன நிபுணர்களால் நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பில் 523 ஆசிய சிங்கங்கள் உள்ளதாக ஆச்சர்ய தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு நடந்த கணக்கெடுப்பின் போது சிங்கங்களின் எண்ணிக்கை 411 ஆக இருந்தது. அதைவிட தற்போது சிங்கங்களின் எண்ணிக்கை 27 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

## தொடர் மழை எதிரொலி: அதிகரிக்கும் பெரியாறு–வைகை அணை நீர்மட்டம்

கம்பம், மே.11–

தேனி அருகே கேரள எல்லைப் பகுதியான தேக்கடியில் முல்லை பெரியாறு அணை உள்ளது. இந்த அணை மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களின் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கோடை வெயில் வறுத்தெடுப்பதால் கடந்த சில நாட்களாக அணையின் நீர்மட்டம் சரியத்தொடங்கியது.

ஆனால் தற்போது அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதல் நீர்பிடிப்பு பகுதியில் கனமழை நீடித்து வருகிறது. எனவே 111 அடியாக இருந்த நீர்மட்டம் இன்று காலை 8 மணி நிலவரப்படி 115.30 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு 358 கனஅடி நீர் வருகிறது. 150 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது.

வைகை அணையில் இருந்து கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் 4 அடி குறைந்தது. தற்போது கனமழை நீடித்து வருவதால் படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து 37.01 அடியாக அதிகரித்துள்ளது. அணைக்கு 210 கனஅடிநீர் வருகிறது. மதுரை மாநகர குடிநீருக்காக 60 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது.

மஞ்சளாறு அணை நீர்மட்டம் 42.80 அடியாக உள்ளது. அணைக்கு 81 கனஅடி நீர் வருகிறது. அணையில் இருந்து தண்ணீர் திறப்பு இல்லை. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 126.28அடியாக நீடிக்கிறது. அணைக்கு வரும் 10 கனஅடி நீர் அப்படியே திறந்துவிடப்படுகிறது.

மழையளவு விபரம் மி.மீட்டரில் வருமாறு:–

பெரியாறு 1, தேக்கடி 5.5, கூடலூர் 19.5, உத்தமபாளையம் 10, சண்முகாநதி அணை 6, வீரபாண்டி 76, வைகை அணை 7.4, சோத்துப்பாறை அணை 6, மருதாநதி அணை 1.9, கொடைக்கானல் 4.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.